# தாய் உள்ளம்

## (சிறுவர் பாடல்கள்)

ஆசிரியர் : கண்டி எம். ராமச்சந்ரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் உள்ளம்

## (சிறுவர் பாடல்கள்)

~ கண்டி எம். ராமச்சந்ரன் –



UNIVERSITY OF PERA...
27 SEP 2006
LIBRARY

# මව් සිත්

## (ළමා ගී)

- කන්ඩි එම්. රාමචන්ද්‍රන් -

# MOTHER'S HEART

## (Children Songs)

-Kandy M. Raamachandhran -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் வெளியிட்ட நூல்கள் :

| | | |
|---|---|---|
| 01. | விடிவை நோக்கி – கவிதைகள் | - 1987 |
| 02. | கவிதை – கவிதைகள் | - 1987 |
| 03. | சிறுவர் மாலை - பாடல்கள் | - 1993-2004 |
| 04. | தேயிலைத் தோட்ட – மக்கள் பாடல்கள் | - 1996 |
| 05. | இடைவெளி – குறுநாடகங்கள் | - 1997 |
| 06. | 21-ம் நூற்றாண்டுக்குத் தமிழ் எழுத்து | - 1998 |
| 07. | 21 වන ශත වර්ෂයට සිංහල අකුරු | - 1998 |
| 08. | சிறுவர் இலக்கியச் சிந்தனைப் பாடல்கள் | - 2001 |
| 09. | சிறுவர் இலக்கியம் - இசைக் கவிதைகள் | - 2001 |
| 10. | சிறுவர் பாடல்கள் | - 2002 |
| 11 | දේශ පා-ලන / ළුව (ගී) | - 2003 |
| 12. | Poly – tricks – Songs | - 2003 |
| 13. | மரபுக் கவிதை எழுத ... | - 2003 |
| 14. | சிறுவர் சிந்தனைக்கு - இசைக்கவிதைகள் | - 2003 |
| 15. | தேயிலைத் தோட்ட மக்கள் பாடல்கள் | - 2004 |
| 16. | சிறுவர் விழிப்பணர்ச்சிப் பாடல்கள் | - 2004 |
| 17. | தேர்தல் – கவிதைகள் | - 2004 |
| 18. | மக்கள் இலக்கியம் - இசைக்கவிதைகள் | - 2004 |
| 19. | கதம்பம் ( புதுக்/மரபுக்/இசைக்-கவிதைகள்) | - 2004 |
| 20. | புரட்சிக் - கவிதைகள் | - 2004 |
| 21. | குறும்பா... சைனீஸ்... ஹைக்கூ...வெண்பா | - 2005 |
| 22. | கூட்டத்தில் கூடிநின்று - சிறுகதைகள் | - 2005 |
| 23. | மலையாண்டி - குறுநாடகங்கள் | - 2005 |
| 24. | மக்கள் இலக்கியம் - கவிதைகள் | - 2005 |
| 25. | மக்கள் கலை இலக்கியம் - கவிதைகள் | - 2005 |
| 26. | வெற்றி - கவிதைகள் | - 2005 |
| 27. | பாரதி யார் - கவிதைகள் | - 2005 |

**சஞ்சிகை : கவிதய் - 1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : 28. தாய் உள்ளம்
(சிறுவர் பாடல்கள்)

ஆசிரியர் : கண்டி எம். ராமச்சந்ரன்
(ஆர். முத்துக்கருப்பன்)

முதற் பதிப்பு : 2006-01-07
(# 3371-20.01.1934 கண்டிப் பிரிவு)

வெளியீடு : 2006-04-07
(# 6293- 22.04.1970 மாத்தளை நகரம்)

வெளியிடுபவர் : கண்டி. எம். ராமச்சந்ரன்

படிபெற : # 2/1 ரிவடேல் ரோட்
அனிவத்த
கண்டி - 20,000.

♦ ஆயிரம் இயந்திரங்களை
இயக்கும் உன்கைகள்
அரசியல் இயந்திரத்தை
இயக்கும் ஓசைதான்
பூமிக்கு நீ தரும்
பூபாள ராகம்.

- மக்கள் கவிஞன்
இன்குலாப் -

(சாஹுல் ஹமீட்)

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006
LIBRARY

599814

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரிமை : திருமதி ரமனோ பிரின்ஸ்குமார்

ISBN : 955 - 98438 - 8 - 5

கணினியாக்கம் : வெணுஷா
# 30, பேராதெனிய ரோட்
கண்டி - 20,000.



மரணப் படுக்கையில்
வோல்டேர் இருந்தபோது :

மதகுரு : தங்களுக்கு
ஆத்ம விடுதலையளிக்க
வந்திருக்கிறேன்.

வோல்டேர் : தாங்கள்
எங்கிருந்து வருகிறீர்கள் ?

மதகுரு : கடவுளிடமிருந்து
நேராக வருகிறேன்.

வோல்டேர் : அதற்கான அத்தாட்சி
காட்டுங்கள் பார்க்கலாம் !

மதகுரு : ???

கத்தோலிக்க மதத்தில் தனக்கு
முழுநம்பிக்கை இருக்கிறது
என்று கையெழுத்துப் போட்டுக்
கொடுத்தால் ஒழிய
எந்தச் சடங்கும் செய்யமுடியாது.

வோல்டேர் : முடியாது !
போய் வாருங்கள் !

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## .... சமர்ப்பணம் !

நாத்திகத்தின் பிதாமகன்
சித்தார்த்த கவ்த்தம
புத்தனுக்கே....



நீங்கள்
கடவுளைப் பற்றிக்
கவலைப்படத் தேவை இல்லை !
உங்களை பற்றிய
கவலை
உங்களுக்கு இருந்தால்
போதும்.

— புத்த ஞானி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

VI

## (1) முன்னுரய்





◆ பாட்டா பாட்டி
பகர்வ தெல்லாம்
பயபக் தியுடனே
நீவீர் ஏற்றால்...
மாட்டீர் என்றென்
றும்முன் னேற
மனதில் கொள்வீர் ~ ஆம் !
சிறுமிகளே ! ~ ஆம் !
சிறுவர்களே !

◆ மாட்டு வண்டிக்
கால மேதான்
மகிமை என்பார்
மகிழ்ச்சி பொங்க...
கேட்டுச் சும்மா
நீர்தலை யாட்டின்...
கீழ்நிலைக் கேநீர்
இழிவீரே ! ~ ஆம் !
உணர்வீரே !

◆ "அவர்சொன் னார்இவர்
சொன்னார் என
ஆரா யாது
ஏற்காதே !
சுயமாய் நீயே
சிந்தி !" எனச்
சொக்ரடீஸ் சான்றோன்
சொன்னதையே ~ ஆம் !
உணர்வீரே !




***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## (2) என்னுரை :

♦ அப்பா அம்மா
பகர்வ தெல்லாம்
அப்படி யே ஆம் !
நீவீர் ஏற்றால்...
தப்பாம் வழியில்
நீவீர் சென்றே...
தடுக்கிக் குப்புற
நீவீர் விழுவீர் ! ~ ஆம் !
சிறுவர்களே ! ~ ஆம் !
சிறுமிகளே !



♦ அம்மா அப்பா
காலத் தில் ஆம் !
அவர்கள் காணா
அதிசய மன்றோ...
"கொம்பியூட் டர், டி.வி.
டெக்ரிமோட் ஹேண்ட்ஃபோன்"
குறுக்குக் கேள்விகள்
பற்பல கேட்டே ~ ஆம் !
தெளிவீரே ! ஆம் !
தெளிவீரே !



♦ "எல்லாம் வல்லோன்
இறைவன் என
ஏற்பீ ரா? நீர் ! "
எனக் கேட்க...
"இல்லான் உள்ளான்
இருக் கட்டும்...
எனக்கவ னைக்காண



ஆசை !" என்றார் ~ ஆம் !
ஆதர் சி கிளார்க்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே :

01. தாய் உள்ளம்
02. தாய் உள்ளம்
03. தாய் உள்ளம்
04. இடைவெளி
05. பொய்யே
06. பள்ளி எழுச்சி
07. ஆதங்கம்
08. போலிகள்
09. புத்தர்
10. அந்த நாள்
11. பேதம்
12. தர்ம தீபம்
13. தஸ்லிமா
14. கலைஞர்
15. உலகம்
16. மழை
17. நாலு வருணம்
18. மதம்
19. போலிகள்
20. வீணன்
21. சாட்சி
22. பாரதி
23. விழிப்பு
24. இறைவன்
25. படையல்
26. விழிப்பு
27. சூரியன்
28. வீரத்தாய்
29. மனிதன்
30. சூழல்
31. பாடசாலை
32. விளம்பரம்
33. பெண்
34. புத்தன்
35. நாயே
36. பாரதி
37. ஆதங்கம்
38. கூண்டுக்கிளி
39. குழந்தை உள்ளம்
40. ஷா
41. உணவூட்டல்
42. காகம்
43. பாடம்
44. வேடிக்கை
45. வட்டுக்-கருப்பட்டி

***

(3) படைப்பு?

கஜல் பாணி...

★ களிமண்ணில் இருந்தே
மனிதனை என்றோ
கடவுள் படைத்தானாமே....
களிமண்ணைப் படைத்தது
கடவுளுக்கு முன் அவன்...
அம்மாவா? அப்பாவா?

***

★ புத்தருக்குப் பிறகு
எந்த சமூக சீர்திருத்த வாதி
இந்தியாவில் தோன்றினான்
என்னைத் தவிர ?



சீர் திருத்தச் செம்மல் –
ஈ.வெ.ராமசாமிப் பெரியார் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 01. தாயுள்ளம்

- குருவிக் கூட்டைப் பாரடா !
'கீச் கீச்' சத்தம் கேட்குதே !
குஞ்சு ஏதும் இருக்குதோ? ~ அதற்
குணவ ளிப்ப தாரடா?

- தாய்க்கு ருவிதன் சொண்டிலே
தாங்கிக் கொண்டு வருகுதே !
உணவு தானோ? அதுவடா ! ~ தன்
குஞ்சுக் கூட்டப் போகுதோ?

- கூர்ந்து நாங்கள் பார்க்கிறோம் !
கூச்சம் எங்கள் மனதிலே !
குஞ்சு வாயைப் பிளக்கவே ~ உணவைப்
பஞ்சு போலப் பருக்குதே !

- விந்தை விந்தை இதுவடா !
விளக்கஞ் சொல்ல முடியுமோ?
அன்புத் தாயின் அரவணைப்பை
அளந்து சொல்வோன் யாரடா?

* * *



## 02. தாயுள்ளம்

- கோழிதன் குஞ்செல்லாம்
கூட்டிச் சென்று.... (கோழி)
'கொக்கொக்' என்றே
கூப்பிட் டேதான்... (கொக்...)
கொத்திச் சாப்பிடச் சொல்கிறதே....
'கொக் கொக்'
கொத்திச் சாப்பிடச் சொல்கிறதே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ காகமொன் றருகில்
களவில் வந்தே.... (காக..)
கள்ளப் பார்வயப்
பார்க்கக் கண்டே.... (கள்ளப்..)
கத்திக் கொத்தப் பாய்கிறதே...
'கொக் கொக்'
கத்திக் கொத்தப் பாய்கிறதே !

♦ குஞ்சுகளய்த் தன்குடய்ச்
சிறகுக் குள்ளே.... (குஞ்சு...)
கூப்பிட் டணய்த்துக்
கூட்டி வய்த்து... (கூப்பிட்..)
குமுறிக் கொண்டு நிற்கிறதே
"கொக் கொக்"
குமுறிக் கொண்டு நிற்கிறதே !

♦ தாயின் அன்பின்
தரம தென்ன !... (தாயின்)
சேயிடங் கேட்டறித்
திடலா மோடா ?.. (சேயி...)
'கொக்கொக் கொக்கோ'



குமுறலிலே....
சொக்கி விட்டோம் ! ~ சொல்ல
வார்த்தய் யுண்டோ ? ~ வேறு
வார்த்தய் யுண்டோ?

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. தாயுள்ளம்

- அப்பா உன்னைய் ஏசுவதோ
  ஆதர வன்பில் லாதாலா?
  இப்படி அதற்காய் நீ யழுதல்
  எப்படி? அய்யா ! ஏற்பேன் நான் !



- விளய்யாட் டொன்றே விடிவில்லய்
  விளய்யா டியது இனிப்போதும்
  விரய்ந்து ஓடிப் படிஎன்றால்
  கரய்ந்து நீயும் அழலாமோ ?

- உடலின் உறுதி ஒன்றுமட்டும்
  உயர்வய் உனக்குத் தந்திடுமோ?
  படிப்பிலும் கவனம் வேண்டுமய்யா—அடம்
  பிடித்தழ வேண்டாம் ! எடுகுவடி ! –நீ
  படிகுவடி ! படிகுவடி !

- படிப்பிலும் வல்லமய் உனக்கிலய்யேல்
  மடப்பயல் என்றே பெயர்பெறுவாய் !
  சிறப்பா? உனக்கிது ! சொல்மகனே ! – நீ
  மறுத்தே சொல்லாய் ! நல் மகனே ! என
  தருமய்ச்செல் வமகனே !

* * *

## 04. இடய்வெளி

காக மொன்று பறந்து எங்கள்
வாசல் பக்கம் வந்தது...
'காக்கா' வென்று கரய்ந்து விட்டுக்
கூரய் மேலே சென்றது !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04

♦ கூரை மேலே சத்தங் கேட்டுக்
கூர்ந்து அங்கே பார்க்கிறேன்...
கோழிக் குஞ்சைக் கொத்திக் கொன்று
கொத்திக் காகம் தின்னுதே !



♦ வீட்டுள் பாட்டி அம்மா விடமோ
வினைய மாகச் சொல்கிறார்....
விருந்து உண்ண உறவினர்கள்
வீடு வருவார் என்றுமே !

♦ விஷயம் தெரிந்த நானும் கேட்டு
விழுந்து விழுந்து சிரிக்கிறேன்...
விவரத் தைநான் சொல்ல அம்மா
விம்மி விம்மி அழுகிறாள் !

♦ பாட்டி சொன்ன கதையைக் கேட்டுப்
பகிடி யாய்நான் சிரிக்கிறேன்...
கோழிக் குஞ்சின் கொலையை எண்ணிக்
குமுறி அம்மா அழுகிறாள் !

♦ குறுக்கே பூனை ஓடி னாலும்
தலைந டுங்கப் பாட்டியே...
"நில்போ காதே வெளியே எங்கும்
நல்ல நல்ல" பாட்டதே !



♦ பல்லி ஏதோ சொல்லு தென்ற
பலக தைகள் சொல்லியே...
பில்லி சூனியம் பேய்பூ தமென்றும்
பிதற்று கின்றார் ! கிள்ளியே !

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 05. பொய்யே ?

- கல்ச் சிலய்யய்ச்
சாமி எனச்
சொல்லி ~ இங்கே
காணிக் கய்யாய்ச்
சேர்க்கிறாரே சல்லி ! (கல்ச்)

- நேர்த்திக் கடன்
என்றும் வேறு
சொல்லி ~ வெகு
நேர்த்தியாகச்
சேர்க்கிறாரே வெள்ளி ! (நேர்த்)

- சொர்க்கம் நர
கென்றும் வேறு
சொல்லிக் ~ காசய்ச்
சுளாய் சுளய்யாய்
இடுக்கிறாரே அள்ளி ! (சொர்க்...)

- சாத்ரஞ் சடங்
கென்றும் வேறு
சொல்லி ~ அய்யர்
பார்த்தி ருக்கப்
பறிக்கிறாரே சல்லி ! (சாத்ரஞ்)

- பார்ப் பானய்
அய்யன் என்ற
காலம் ~ அன்று
போச் சென்றான்
பாரதி அய்யன் !...
இன்றும் பொய்யே ?



***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௦௬. பள்ளி யெழுச்சி

♦ தாயே ! மகளே !
எழுந்தி ரம்மா ! ~ ஆறயத்
தாண்டிச் சொல்கிறதே ! ~ நேரம்
தாண்டிச் செல்கிறதே ! (தாயே)

♦ காலயக் கடன்களய்
ஒவ்வொன் றாய், நீ
கடிதாய்ச் செய்தே
முடித்தால் தான், பொடி
நடய்யாய்ப் பாட
சாலய்க் கு நீ
போய்ச்சென் றடய்ய
முடியு மம்மா ! (தாயே)

♦ தலய்முடி சீவி
சடய்பின் னி, நான்
சாப்பா டுனக்குச்
சமய்த்தால் தான், நீ
அமய்தியாய்க் கொஞ்சம்
அருந்தி டுவாய், பின்
அவசர மின்றிச்
செல்லலா மம்மா ! (தாயே)



♦ படிக்கின்ற வயதில்
படிக்கா மல், நீ
படுத்துத் தூங்கி
முடித்தா யேல் ~ பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிவே யில்லய்
விளங்கிக் கொள், நீ,
சடுதியாய் எழுவாய் !
தாயே ! மகளே ! (தாயே)

♦ அடுப்பய் ஊதும்
பெண்ணுக் கு, இங்கே
படிப்பெதற் கென்னும்
பதர் முகத்தில், நீ
காறி உமிழ
வேண்டாமோ, நீ
கடிதாய் எழுவாய் !
கண்ணே ! மகளே !



♦ ஆணுக் குப்பெண்
சமமென் றே, இங்கே
அடித்துப் பேச
ஆள்வேண்டும், நீ
படித்தே பட்டம்
பெற்றால் தான், என் மனப்
பாரம் குறய்யும்
பாராய் ! மகளே !



***

## 07. ஆதங்கம்

♦ வீடு வாசல் இல்லாமல்
வீதி யோரம் வதிவோராய்க்
காணைக் கண்ணை பனித்திடுதே !
காணா யோ? நீ என் தோழா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காணி நிலமே இல்லாமல்
கண்ணீர் வடிக்கும் பலபேரய்க்
காண மனமே பதய் க்கிறதே !
காணா யோ? நீ என்தோழி !

உண்ண உணவு இல்லாமல்
ஊரில் அலய்யும் பலபேரய்
எண்ணிப் பார்த்தே அழுகின்றேன் !
எண்ணிப் பாராய் ! என்தோழா !

பூமி அதிர இங்கோர்நாள்
பூகம் பம்வெடிக் கவேண்டுமெனப்
பொறுமுது எந்தன் மனமேதான் !
கருத்தறி வாயா? என்தோழி !

* * *

## 08. போலிகள் ?

உண்மய் அன்பு பாசமெல்லாம்
உள்ளத் துள்ளே இல்லய்யடா !
உதட்டில் மட்டும் வடிகிறது !
உணர்ந்து கொள்வாய் ! என்மகனே !~
ஆம் !
உணர்ந்து கொள்வாய் ! என்மகனே !



காசு பணமிருந் தால்தானே
காலய்ச் சுற்றும் உறவடியே !
காசு பணமிழந் திருந்தாலோ
கண்டும் காணார் ! உனய்மகளே !~ ஆம்!
கண்டும் காணார் ! உனய் மகளே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* போலி யாகவே வேடமிட்டே
பொய்யாய்ச் சிரித்தழும் உலகமடா !
வேலி பயிரய் மேய்ந்துவிடும் !
விழிப்பாய் இரடா ! என்மகனே ! ~ நீ
விழிப்பாய் இரடா ! என்மகனே !



* ஆசய் வார்த்தய் பலசொல்லி
ஆளய் ஏய்க்கும் உலகமடி !
ஓசய்ப் படாதொதுங் காவிடிலோ
உபத்திர வந்தான் என்மகனே ! ~ ஆம் !
உபத்திர வந்தான் என்மகனே !

***

## 09. புத்த பிரானே !

* புத்த சமயப் போதனய்கள் ~ இங்கே
புழுதி படிந்தே கிடக்கிறது !
சுத்தஞ் செய்ய யார்வருவார்?
புத்த பிரானே ! சொல்லய்யா ! ~ ஆம் !
புத்த பிரானே ! சொல்லய்யா !



* கத்தி வேதம் ஓதுவதும் ~ பின்
கதறி விளக்கஞ் சொல்வதுமே
புத்த சமயம் ஆனதய்யா !
புத்தி சொல்ல யார்வருவார் ? ~ ஆம் !
புத்தி சொல்ல யார்வருவார் ?

* கொலய்க ளவுபொய் குடிகாமம்
கூடா தென்றே சொன்னாயே !
கூடி இங்கே காணுதய்யா !
குறய்க்க வழியய்ச் சொல்வாயா ? ~ அய்யா !
குறய்க்க வழியய்ச் சொல்வாயா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✸ ஓதும் புத்த சமயத்தார் – இங்கே
ஒருவரும் நடய்முறய் இடவில்லய் !
யாதும் இதனால் பயனுண்டா ?
அய்யா புத்த பகவானே ! – உன்
அஹிம்சய்க் கிங்கே இம்சய்யப்பா !

***

## 10. அந்த நாள் ?



✸ அம்மா, அப்பா
சொற் கேள்என
அடம்பிடிப் போரே ! – அய்யா !
அடம்பிடிப் போரே !
சற்று நாங்கள்
சொல்வ தய்யும்
செவிமடுப் பீரே ! – அம்மா !
செவிமடுப் பீரே !



✸ அவன், அவளுடன்
சேராதே என்றே
அடித்து ஏசுறார் ! – அய்யோ !
அடித்து ஏசுறார் !
அது ஏன் எனத்
தடுத்துக் கேட்டால்
விவரஞ் சொல்கிறார் ! – இப்படி
விவரஞ் சொல்கிறார் !

මව් සිත්
(මො සි)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




✸ அவன், அவளின்
சாதி, மதம்
வேறு என்கிறார் ! ~ அப்பா !
வேறு என்கிறார் !
அதனால் தான்
அவருடன் நாம்
சேரக் கூடாதாம் ! ~ அம்மா !
சேரக் கூடாதாம் !

✸ அவள், அவனும்
நானும் ஒரே
வகுப்பில் படிக்கிறோம் ! ~ அம்மா !
வகுப்பில் படிக்கிறோம் !
அது எப்படி ?
ஆகு மென்றால்
அடித்து ஏசுறார் ! ~ அப்பா !
அடித்து ஏசுறார் !

✸ மூத்தோர் சொல்
வார்த்தை எல்லாம்
அமுத மாகுமா ? ~ அம்மா !
அமுத மாகுமா ?
பிரிவு பேதம்
மட்டு மன்றோ ?
தொடரும் எந்நாளும் ! ~ அம்மா !
தொடரும் எந்நாளும் !



කන්ඩි එම්. රාමචන්ද්‍රන්

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



✸ அடி தடியய்
ஏற் படுத்தும்
அறிவுரய் களய் ~ நாம்
அறிவுரய் களய்ப்....
புற மொதுக்க
வேண்டாமோ ?
புரிந்து கொள்வீரே ! ~ நன்றே
அறிந்து கொள்வீரே !

✸ ஆட்டய் மாட்டய்
விடவும் நாங்கள்
அவல மானோமே ! ~ அய்யா !
அவல மானோமே !
அவற் றிடய்யில்
சாதி , மத
பேத மில்லையே ! ~ அம்மா !
பேத மில்லையே !



✸ சாதி , மத
இனச் சடங்கு
சாத்திரங் களய் ~ குல
கோத்திரங் களய் ~ இவர்
சாக்கடய் யில்
தூக்கி வீசும்
நாள் வரவெப்போ ? ~ நல்ல
நாள் வரவெப்போ ?

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. பேதம்

- மதங்கள் எனப் பிரிந்தே - நீர்
மதம்பிடித் தேஅலய்ந்து - விதண்டா
வாதம் பல புரிந்தே - சண்டய்யிட்டே
மடிந்தே போவதுதான்? - மனிதரே !
மகிமய் என்பீரோ ?

- சாதி என்பதய் யும் - நீர்
தாமே உண்டாக்கி - எங்கும்
சண்டய் யிடுவதிலும் - அதில்
மண்டய் உடய்தலுமே - உலகில்
மகிமய் என்பீரோ ? - மடய்யரே !
மகிமய் என்பீரோ ?



- இனம்குலம் எனப்பிரிந்தே - நீர்
இடுகின்ற சண்டய்யிலே - எங்கும்
சனம்பல சாவதுவே - தினம்
சாக்காடு போவதுமே - இதம்
தந்திடு மென்பீரோ ? - பதர்காள் !
தந்திடு மென்பீரோ ?

- ஆறறி வுள்ளோரா ? - நீர்
அசிங்கம் அசிங்கம் என - அய்யோ !
காறிச் சான்றோரே - உமிழக்
காரண மாமே அய்யா ! - இவற்றய்க்
களய்ந்திட வேண்டாமோ ? - இன்றே
களய்ந்திட வேண்டாமோ ?

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. தர்ம தீபம்

◆ தர்ம தீபம் என்னும் பெயர்
சிறி லங்காவுக்கு ~ ஆம் !
வந்த தற்குக் காரணந் தான்
என்னவோ? தம்பி ! ~ சொல்லு !
என்னவோ? தம்பி !



◆ புத்த பிரான் போதனைய் யய்ப்
போற் றுவதால்தான் ~ ஆம் !
காரணமாய் அப்பெயரே
ஆனது அண்ணே ! ~ சொன்னேன் !
ஆனது அண்ணே !

◆ புத்த தர்மப் போதனைய் தான்
என்ன? வென்றேதான் ~ பலர்
புரியும்படிச் சொல்லுவாயா?
புண்ணியம் தம்பி ! ~ உனக்குப்
புண்ணியம் தம்பி !



◆ அன்ப கிம்சய் என்ப துவே
அவரின் போதனைய் ~ ஆம் !
அதன்படிக்கே வாழ்வதுதான்
அவர் கருத்தண்ணே ! ~ சொன்னேன்
அவர் கருத்தண்ணே !

◆ தர்ம தீபம் இன்று இங்கே
அதர்ம தீபமாய் ~ இப்போ
ஆனதற்கே காரணந்தான்
என்னடா? தம்பி ! ~ சொல்லு !
என்னடா? தம்பி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ பாலி யிலே ஓதுதல் தான்
நாளும் செய்கிறார் ! ~ ஆனால்
ஆளில்லய்யே செயலிலிட
அதனால் தானண்ணே ! ~ சொன்னேன்
அதனால் தானண்ணே !



♦ பஞ்ச சீலம் என்ப துவோ
என்ன? ஆச்சிண்ணு ~ இங்கே
பலரறியச் சொல்லுவாயா !
பணிவுடன் தம்பி ! ~ ஆமாம் !
பணிவுடன் தம்பி !

♦ "பங்சர்ட்" சீலம் ஆகிப் போச்சு
எங்கள் லங்காவில் ~ அய்யோ !
பாரே எங்கும் அசிங்கந்தான்
காண்கிறோம் அண்ணே ! ~ சொன்னேன்
காண்கிறோம் அண்ணே !

♦ ஈ எறும்பய்க் கொல்லு வதும்
பாவ மென்கிறார் ~ ஆனால்
இங்குஎன்ன ? நடக்குதுண்ணு
சொல்லடா ! தம்பி ! ~ அறியச்
சொல்லடா ! தம்பி !

♦ மனிதக் கொலய்க் குவியல் களய்
மலய்யாய்க் கண்டோம் ! ~ இதய்
மறுத்துச்சொல்வார் யாருமுண்டா ?
சிரித்ததே அண்ணே ! ~ உலகம்
சிரித்ததே அண்ணே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவ்த்த தர்மப் போத கரின்
பங்கு என்னவோ ? ~ ஆம் !
பலரறிய அதய்யும் கொஞ்சம்
விவரிடா ! தம்பி ! ~ இங்கே
விவரிடா ! தம்பி !



பஞ்ச சீலம் "பங்சர்ட்" சீலம்
ஆகிப் போனதே ~ இந்தச்
சங்கய் கெட்ட போதகரால்தான்
எங்குமே அண்ணே ! ~ சொன்னேன்
எங்குமே அண்ணே !

தர்ம தீபம் இன்று இங்கே
அதர்ம தீபமாய் ~ அய்யோ !
ஆகிப்போச்சே என்றுதானே
அழுகிறார் ! அண்ணே ! நல்லோர்
அழுகிறார் ! அண்ணே !

இந்த ~
அவப் பெயரய் மாற்று தற்குத்
தவப் புதல்வர்கள் ~ பல்
லாயிரம் பேர் உதயமாக
வழி சமய்யடா ! ~ தம்பி !
வழி சமய்யடா ! ~ இன்றேல்
விழி யிருந்தும் குருடராவோம்
நினய்வில் வய்யடா ! ~ தம்பி !
நினய்வில் வய்யடா !

***



- புத்தா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. தஸ்லிமா நஸ்ரீன்

♦ தாயே ! எங்கள்
தஸ்லிமா நஸ்ரீனே ! ~ உன்
தலய்யய் வெட்டியே ~ உன்னய்
நரபலி யிடவே
நாயாய் அலய்யும்
நரரின் ஊளய்யால் ~ மனம்
நய்ந்தோம் நாம் ! மகளே ! ~ மனம்
வெந்தோம் நாம் ! மகளே !

♦ தாய்க்குலந் தன்னய்
நாய்க்குல மாக ~ ஆம் !
நாட்டு மிவரெல்லாம்
தாய்வயிற் றிருந்தே
தனியாய்ப் பிறந்த
நாய்கள் என்போமா? ~ வெறி
நாய்கள் என்போமா?



♦ தாய்க்குல உரிமய்
தனய்யே நாட்ட ~ நீ
தலய்விதா னம்மா ! ~ அதற்குன்
தலய்தான் விலய்யோ?
நாய்கள் இவரின்
நரபலி நாடகம்
நாமே விடலாமா? ~ தொடர
நாமே விடலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யேசு நாதரைச்
சிலுவையில் அறைவு - ஆம்!
நீசச் செயலே! - ஆம்!
நீசச் செயலே!
பேசும் எழுதும்
பெரிய உரிமையைப்
பறித்திட விடலாமோ? - வானரர்
பறித்திட விடலாமோ? - அவர்
தஸ்லிமா நஸ்ரினைத்
தண்டிக்க விடலாமா? - ஐயா!
தண்டிக்க விடலாமா? - ஐயோ!
கண்டிக்க வாயில்லையோ? - ஆம்!
தடுத்திடக் கைமுடமோ?



* * *

## 14. கலைஞர்?

- காசுபணம் உள்ளவர்கை
கால்பிடித்து வாழ்பவரோ?
கலைஞர் - நற் - கலைஞர்!

- வேலிபயிர் மேய்ந்துதானே
வேலைபற்று வாழ்வோரோ?
கலைஞர் - நற் - கலைஞர்!



- ஊரையேய்த்து வாழ்ந்துஎன்றும்
உடல்வளர்த்துத் திரிவோரோ?
கலைஞர் -நற் - கலைஞர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ மேடய்களிற் பேசியதய்ப்
பாடய்யிட்ட காடய்யரோ?
கலய்ஞர் ~ நற் ~ கலய்ஞர் !



***

## 15. உலகம் ?

♦ பூவுல கென்பது
பொய்யோ? ~ இது
புல்லர் உலகே
மெய்யோ?

♦ சாதிச் சண்டய்க்
களமோ? ~ இது
சாக்கடய் மதஇனக்
குளமோ?



♦ உள்ளார்க் கேகவர்க்
கம் இதுவோ ? ~ ஆம் !
இல்லார்க் கென்றும்
நரகோ?

♦ கள்வர் கயவரின்
கடய்யோ? ~ இது
நல்லவர்க் கென்றும்
நரகோ?

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. மழை !

◆ மழையே ! மழையே !
வா ! வா ! வா !
வயலில் மட்டும்
பொழி வாயே ! – நல்
வளமே அதற்கு
அருள்வாயே ! – நல்
வளமே அதற்கு
அருள்வாயே !



◆ ஓலைக் கூரை
மேல் விழுந்து
ஏழைக் குடிலைக்
குளிர்ந்து ழைந்து – அங்கே
இன்னல் என்றும்
இழைக்காதே ! – அங்கே
இன்னல் என்றும்
இழைக் க்காதே !

◆ மழையே ! மழையே !
சொல் வா யே !
மாடி மனை யுட்
புகுவதற்கு – மன
வலிமை உனக்கில்
லா தா லா? – நீ
வந்தெம் குடிலைக்
குளிர்ந்து ழைவாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ மழய்யே ! மழய்யே !
சொல் லா யோ ?
ஏழய்க் கிரங்க
மன மின் றியா? – நீ
ஓலய்க் குடிலுக்
குட் புகுந் தே – இன்னல்
ஏழய்க் கென்றும்
இழய்க் கின்றாய் ! – இன்னல்
ஏழய்க் கென்றும்
இழய்க் கின்றாய் !

◆ மழய்யே ! மழய் யே !
சொல் லா யோ?
மண் குடில் இடித்து
வீழ்த் துவ தும் – உன்
மனதுக் கிசய்ந்த
விளய் யாட் டா? – உன்
மனதுக் கிசய்ந்த
விளய் யாட் டா?



◆ சிதய்த்து வீழ்த்திய
குடி லுள் ளே
புதய் ந்து செத்த
சட லத் தய் – நீ
இதயம் மகிழ்ந்தே
பார்ப் பா யா? – சொல் !
இதயம் மகிழ்ந்தே
பார்ப் பா யா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



♦ மழய்யே ! மழய்யே !
நீ பொழிந் து - என்றும்
உழவர்க் கேதான்
உத வா மல் – ஏன் ?
ஓலய்க் குடில்வாழ்
ஏ ழய் கட் கே – என்றும்
உபத்திரஞ் செய்தே
மகிழ் கின் றாய் !

***

## 17. நாலு வருணைத்தில் நாலாயிரஞ் சாதி ! தோழி !

♦ வந்தாரய் வாழவய்த்த
வளமிகு தமிழ்நாடென்று
சொன்னவன் மடய்யனன்றோ !
சோட்டாலே அடிக்கவாரீர் !

♦ நாலென்ற வருணைத்துள்
நாறுதே மூக்கய்த் துளய்த்தே
நாலா யிரஞ் சாதியங்கே !
நய்யாண்டி பிறர் செய்கிறார் !

♦ ஊரினில் பேரிலெல்லாம்
ஒட்டியே தொங்கும் சாதி
நாறிடும் சேரிப் பேச்சும்
நம்காதில் விழுகுதய்யோ !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சாதியின் சண்டையாலே
  சாக்கடை யாவ தோடு
  வீதியே கொளுத்திச் சாம்பல்
  வேறெங்கு மில்லாச் செய்கை !

- கோவிலுள் குறைந்த சாதி
  கும்பிடப் புக விடாதார்
  நாவிலே 'நாம் தமிழ' ரென
  நவில்வதும் தமிழ்நாட் டில்தான் !



- பாரதிக்கும் தாசனுக்கும்
  பகலிலே விழா வெடுத்து
  சேரிக்கு இரவில் தீயைச்
  செலுத்திடும் முற்போக் காளர்?

- பாடல் கவிதை கதைகள்
  பக்கம் பக்கமாய் எழுதி
  மேடையில் முழக்க மெல்லாம்
  விழலுக்கு இறைத்த நீரே !

- நடைமுறையில் இட்டிடாது
  நடக்குமா? எதுவும் நன்றாய் !
  கடைவைத்து வியாபாரமே !
  காண்கிலோம் இவற்றால் நன்மை!

- சாதியை ஒழிக்கும் மட்டும்
  தமிழினம் உருப்ப டாது – சம
  நீதியே ஓங்கும் மட்டும் – இழி
  நிலையொன்றே தொடர்கதை! போ!

~ * ~

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. மதம்



♦ எம் மதமும்
சம்மத மென்
றிருந் தேன் – பின்னர்
அம் மதத்தார்
செய்கய் களய்
அறிந் தேன் – இப்போ
எம் மதமும்
பொய்மத மென்
றுணர்ந் தேன் – இதய்
உம் மிடத்தில்
சொல்லு வதில்
மகிழ்ந் தேன் ! – மனம்
மகிழ்ந் தேன் !

***

## 19. போலிகள்?



♦ கலய்கள் இலக்ய மென
அழுவான் ! – அதற்கு
விலய்யே தருக வென்றும்
தொழுவான் ! – பின்
மலய் போல மாலய்கொண்டும்
வருவான் ! – நன்கு
வலய்வீசி தனவான்பின்
குழய்வான் ! – முன்
தலய்யிலே பேன் போலச்
சொறிவான் ! – பின்
தலய்விரி கோலமாகத்
திரிவான் ! – கலய்இலக்யம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலய்மேல் இருப்பதுபோல்
நெளிவான் ! – தன்போலி
நீலய்யய் மறய்க்க மழய்
பொழிவான் ! – பொய்மழய்
பொழிவான் !

***

## 20. வீணன் ?



♦ பாரதிக்கு உண்டா
மொரு தாசன் – அந்தப்
பாரதி தாசனுக்
குநான் தாசன் – இதோ !
பாரு என்னய் என்று
பாடும் பாணன் ! – சாமி
தேரு மிழுக்கின்
றானே – வீணன் ?

***

## 21. சாட்சி !

♦ உழய்யா துண்ணும்
உழத்தர் தானோ ?
உங்கள் கண்களில்
உயர்ந்தவரே !
உழய்த்தே உண்ணும்
உத்தமர் தானோ ?
உங்கள் கண்களில்
தாழ்ந்தவரே !

599814

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனிதரய்ப் போலே
வாழ்பவ ரெல்லாம்
புனிதரே அல்லர்
புரியீரோ ?
புனிதரய் நீங்கள்
மனிதராய் மதியாப்
புண்மய்யய்ப் போக்க
முனய் யீரோ?



- பகுத்தறி வுள்ளோன்
மனிதனெனச் சொன்ன
பய்த்தியக் காரன்
சாட்சியடா !
பகுத்தறி வில்லாப்
பதர் மனிதர்களே
பரந்திங் கேதரன்
காட்சியடா ! ~ பார்
காட்சியடா !

***

## 22. பார் ! பாரதி !

- பார்ப்பானய் அய்யெனென்ற
காலமும் போச்சே ! ~ என்று
பாட்டு அன்று பாடினாயே
பாரதி அய்யரே ! ~ எங்கும்
பார்ப்பனரே வேதமோதும்
பரிதாப நிலய்யே ! ~ பாரில்
பார்த்துப்பலர் சிரிக்கின்றார்
பார்வந் திதய்யே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ சிங்களத் தீவுஎன்றாய்
சேது மோனய்க்கா? – இல்லய்
வங்கம் ஓடி வந்ததும்
எதுகய்த் தொடய்க்கா? – இல்லய்
சிங்களவரும் நீயுமாரியர்
என்ற செறுக்கா? – ஆம் !
எங்கள் இரா வணன் ஆண்டதய்
ஏனடா? மறந்தாய் !

◆ பார்ப்பனரல் லாரய்யுந்தன்
பரம்பரய் ஒன்று – எங்கும்
பார்த்து மணம் முடித்தாகப்
பகர இல்லய்யே ! – அவரும்
பார்ப்பனர் என்போரய்யே
பார்த்துத் தானே – மணமே
பண்ணிக்கொண் டார்என்றே
பகிடியே எங்கும்?

◆ சாதிகளே இல்லய்யடி
பாப்பா என்றுநீ – அன்று
சத்தமிட்டுப் பாடியதில்
சத்தே இல்லய் ! – எங்கும்
சொத்தய்யாய்ப் போனதென்றே
சொல்லி யழவே – அந்தோ !
சோகமே படர்ந்தேதான்
'தா' தெரியுது பார் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'ஈனம்' மென்ற சீரைநீ
எடுத்தே ஆண்டதும் – உந்தன்
'எம்'மென்றே வருகின்ற
மோனைத் தொடைக்கா? – இல்லை
'சீனத்'தென்றே அமைந்த
எதுகைத் தொடைக்கா? – இல்லை
வேறுமென்றே தான்பறையர்'
சாதி யுணர்வா?



ஊருக்குப தேசந்தான்
யாருஞ் செய்யலாம் ! – ஆனால்
உன்வீட்டில் அமலில்லையேல்
உருப்படுமா? சொல் ! – நீ
பேருக்குப் பெரியனெனப்
பெயரே எடுத்தும் – செல்லம்மா
பெற்றபிள்ளைப் பின்பற்றாமல்
வெற்றியுண்டா? சொல் !



சாதிச்சங்க அமைப்பில்
தாமே அங்கமே – வகித்தே
சாதிக்கொடுமை தீதென்
றோதும் உளுத்தரே – மேடையில்
தாசனையும் உன்னையும்
சார்ந்தோ ராமே? – இந்தத்
தோஷிகளைத் தோலுரித்தே
தொலைத் திடுவதெப்போ?

# தாய் உள்ளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ பாரதியும் தாசனதும்
பாடல் வரிகள் – பலதயப்
பாடமாக்கிப் பல்லிளித்தே
பாடிக் காட்டிப் – பலர்முன்
'பார்' அவற்றின் சிறப்பய் என்றே
மார் தட்டிடுவோர் – பலர்
ஊர் சிரிக்கும் உழுத்தரேதான்
பார் அடா ! வந்தே !

♦ தண்ணிபோட்டுத் திரிவதிலும்
தாசன், பாரதி – எங்கள்
கண்ணை தாசன் போலவே
முன்னணி யினரே – என்றே
கண்சிவந்து காட்சிதரும்
தண்ணி வண்டிகள் – அய்யோ !
தாமும், நீர் மூவரும்
தரமாம் ஒன்றே ?

♦ புதய்குழி யிலும்பாரதி ! நீ
புழுக்கங் கூடித் – தாங்காது
புரண்டுபடுத் தருளுவதாய்
ஒரு வதந்தியேதான்? – ஆம் !
உலவித் திரிதல் கண்டு
ஒரு சிலர் மனமே – அய்யோ !
புழுங்கிப் புலம்பியழுகின்ற
புண்மய் காண்பாய் !

– கண்டி எம். ராமச்சந்ரன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விழித்துக்கொண் டேதூங்கும்
வீணர் களான – உந்தன்
எளியபாரதத் தினருக்கோ
யாதே ?நன்மய் ! – உந்தன்
எழுச்சிப் பாடல்களினால்
என்றே சிலரே – ஆம் !
விழிபிதுங்கித் தவித்துநிற்கும்
வேதனய் பாராய் ?

* * *

27 SEP 2006
LIBRARY

## 23. விழிப்பு



- பாரதி, தாசன் பாடலய்ப்
பல்லிளித்துப் பாடி விட்டுத்
தேரிழுத்தே திரியும் – ஆம் !
திருடராய் நம்பாய் ! தம்பி !

- சாதி பேதம் கூடாதெனச்
சத்தமே போட்டுப் பேசிச்
சாதிச் சங்கம் நடத்தும் –பல
சழக்கரய் மதியாய் ! தங்கா !

- சாதி மதநிற மென்றே
தாழ்வு உயர்வு போகம்
பேதய் களய் நீ என்றுமே – ஆம் !
பின்பற்ற வேண்டாம் ! தம்பி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



♦ செடிமரஞ் சிலய்கல் லுக்கே
சேலய் கட்டி வணங்கும்
சிறுமதிச் செயலாளரய் – நீ
'சீ' யென் றிகழ்வாய் ! தங்கா !

♦ கொள்கய்ப் பிடிப்பில் லாத
குட்டிச் சுவரய் நம்பின்
தொல்லய்யே தொடரும் ! – உணர்ந்து
துரே நீ ஒதுங்கு ! தம்பி !

♦ உழய்ப்பின்றி யூரய் ஏய்த்து
உண்டு கொழுத்துத் திரியும்
உழத்தரின் பின் சென்றாயேல் – நீ
உருப்பட மாட்டாய் ! தங்கா !



♦ வட்டி நகய்க் கடய்களிலே
வாய்க்கரிசி வாங்கி யுண்ணும்
வெட்டிக் கலய்இலக்ய வாதியின்
கிட்டே நீ நெருங்கிடிலோ – தம்பி !
கெட்டு நீ சீரழிவாய் ! நம்பு !

* * *

## 24. இறய்வன் இருக்கின்றானா?

♦ முழு – மனிதன்
இருக்கின் றானா? – அரய்
மனிதன் கேட்கிறான் !
அவ னிருந்தால்
உலகத் திலே
எங்கே ? வாழ்கிறான் !
என்றும் கேட்கிறான் ! (முழு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ கறுமய் மனத்துடனே
கருமம் ஆற்றிக்கொண்டு
புனிதன் போல் நடித்தே ~ வெறும்
புகழய்த் தேடிடவே ~ தான்
மனிதன் என்றானடி ! (முழ)

◆ அண்ணன் தம்பி என்ன?
அக்காள் தங்கய் என்ன?
சொன்னால் வெட்கமடி ! ~ நான்
அன்றன்று பெற்றுவரும் ~ ஆம் !
அனுபவப் பாடமடி ! (முழ)



◆ சொந்த பந்த மெல்லாம்
சொத்திருந் தாற்தானடி !
சோதனய் வந்துவிட்டால் ~ இவர்
தூரே சொல்வாரடி ! ~ இந்தச்
சோகத்தய்ச் சொன்னேனடி ! (முழ)

◆ இல்லா ருள்ளா ரென்ற
இருபிரி வுள்ள வரய் !
இருவேடந் தொடருமடி ! ~ மாற்றம்
எள்ளளவும் இல்லய்யடி ! ~ ஆம் !
இதுவே உண்மய்யடி ! (முழ)

* * *

## 25. படய்யல்?



◆ பாலுக் கழும் எங்கள்
பாலகர் தம்மய்ப்
பார்க்க மறந்தீரோ? ~ பாவிகாள்
பார்க்க மறந்தீரோ? ~கற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாறய்ச் சிலய்க்கு நீர்
பால்பழம் வார்ப்பதால்
பக்திமான் ஆவீரோ? ~ பாதகரே !
பக்திமான் ஆவீரோ?

♦ ஒண்டச் சிறுகுடில்
ஒன்றுமில் லாருக்கு
உதவிட மனமில்லய்யா ? ~ உளுத்தரே
!
உதவிட மனமில்லய்யா? ~நீர்
உயர்வான கோபுரக்
கோயில்கள் கட்டினால்
உத்தமர் ஆவீரோ ? ~ உழுத்தரே !
உத்தமர் ஆவீரோ?



♦ பக்கத்து வீட்டாரோ
பட்டினி யில்சாகப்
பச்சடி பலகாரமா? ~ பதர்காள் !
பச்சடி பலகாரமா? ~ நீர்
பண்டாரத் தடியர்க்குப்
பால்பழத் தோடன்றோ !
தெண்டம் கொடுக்கின்றீர் ! ~ தீன்
பண்டம் படய்க்கின்றீர் ! ~ மண்டுகாள் !
பண்டம் படய்க்கின்றீர் !

* * *

## 26. விழிப்பு ?

♦ முன்னைக் குப்பின் முரணுள்
மூழ்கிக் கிடக்கும் சமூகம்
முன்னே றுதலுண்டா? ~ தம்பி ! இல்லய்
பின்னோ[illegible] !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY
SEP 2006

- சாதி இனமத மென்று
சல்லி யாகி இன்று
வீதி சிரிப்படோ! தம்பி ! ~ நீ
மோதி மிதித்திட வாராய் !

- ஆயிரஞ் சாதிகள் உண்டென்
றாமோ தித்த தோடு
அந்நியர் தானேடா ! தம்பி ! ~ பாரதி !
கண்ணிலே பட்டான் ! பாராய் !

- நாலு வருணைத் துடனே
நாலா யிரஞ்சா தியென்றே
தோலுரித் தானேடா ! தம்பி ! ~ பாரதிதாசன் !
தொடரஆ ஸில்லய் ! காண்பாய் !

- அடிமய் இங்கே இல்லய்
ஆணுக் குப்பெண், என்றே
சாடி னானேடா ! தம்பி ! ~ பாரதி !
சரியெனக் காணார் ! காண்பாய் !



- பெண்ணடி மைத்தனம் இன்னும்
பேணும் இந்த நாட்டிலே
மண்ணடி மய் மாறா தென்றான்~ பாரதிதாசன் !
எண்ணம் மண்ணோ ! காண்பாய் !

- சொல்லு செயலுக் கிடய்யில்
சொந்தம் உள்ளோர் இல்லா
சோகம் தானேடா ! தம்பி ! ~ இங்கே
தொடருது ! கான்றி உமிழ்வாய் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாரதி, அவனின் தாசன்
பாடல் களய்மட் டுமிங்கே
மேடய்யில் பாடலாலே ! தம்பி ! – கொள்கய்
பாடய்யில் படுத்தே ! காண்பாய் !

* * *

## 27. சூரியன்

- அம்மா ! அம்மா !
அங்கே பார் !
அக்கினிக் குண்டு
தெரிகிறது ! – அது
அங்கே எப்படிச்
சென்றதுவோ? – அது
அங்கே எப்படிச்
சென்றதுவோ?



- கிட்டே போனால்
சுட்டிடு மோ?
கிட்டே போனால்
குளிர்ந்திடுமோ? – நீ
தொட்டுப் பார்த்த
துண்டாமோ? – நான்
கிட்டே போக
முடிந்திடுமோ ? – நான்
கிட்டே போக
முடிந்திடுமோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



◆ தொட்டுக் கொஞ்ச
முடிந்திடு மோ?
சுட்டுப் போகக்கி
எரித்திடுமோ? ~ அதன்
வட்டம் சுற்றித்
தெறிக்குமொளி ~ ஏன்
இரத்தச் சிவப்பு
நிறமம்மா ? ~ ஏன்
இரத்தச் சிவப்பு
நிறமம்மா ?

◆ இரவில் தோன்றும்
நிலவுக் கும்
இதற்கும் என்ன ?
தொடர் பம்மா ! ~ எனக்கு
அறிய ஆவல்
கூடுதம்மா ! ~ நான்
அறியச் சொல்ல
மாட்டாயா ? ~ நான்
அறியச் சொல்ல
மாட்டாயா ?

◆ சூரியன் என்ற
பெயரதற் குச்
சூட்டி விட்டது
யாரம்மா ? ~ நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுச் சொல்ல
மாட்டாயா ? ~ அப்பாவிடம்
கேட்டுச் சொல்ல
மாட்டாயா ? ~ தாத்தாவிடம்
கேட்டுச் சொல்ல
மாட்டாயா ?

* * *

## 28. வீரத்தாய்

♦ மகனை் வீட்டுள் காணாது
மனமே கலங்கி மாதாவோ
மகனை் வெளியில் தேடிவந்தாள் !
மகனை் வெளியில் தேடிவந்தாள் !

♦ இருளில் தனியாய் நின்றுகொண்டு
எதய்யோ எண்ணி இருக்கின்றான் !
அருகில் அம்மா வருகின்றாள் !
அருகில் அம்மா வருகின்றாள் !

♦ அருமய் மகனே ! நெப்போலியா !
இருளில் தனியாய் நிற்பதற்கு
இல்லய்யா ? உனக்குப் பயமென்றாள் !
இல்லய்யா ? உனக்குப் பயமென்றாள் !

♦ பயமென் பதுவோ என்னம்மா?
விவரம் எனக்கு நீசொல்லு !
விளங்கிக் கொள்ள என்கின்றான் !
விளங்கிக் கொள்ள என்கின்றான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



♦ வீரத் தாயோ என்னசெய்தாள்?
விதய்ந்தாள் இல்லய் பயவுணர்வய் !
வேறு ஏதோ கதய் சொன்னாள் !
வேறு ஏதோ கதய் சொன்னாள் !

♦ வீரம் பெறுதல், இல்லாதது
மேன்மய், கீழ்மய் எல்லாமே
பாரில் தாயால் தானேடா ! – ஆம் !
பாரில் தாயால் தானேடா !

* * *

## 29. மனிதன்



♦ ஆதியில் ஆதாம் ஏவாளே
அவனியில் அவதா ரம்என்போர்
சாதி இனமத மென்றேதான்
சண்டய் வேறும் இடுகின்றார் !

♦ ஒவ்வொரு சாதி இனமதத்துக்
கொவ்வொரு ஆதாம் ஏவாளா?
பொய்மய் இவய்கள் என்றேதான்
புகன்றே ஓதுக்கு என்மகனே !

♦ தாயின் வயிற்றில் பிறவாது
தரய்யில் குதித்த மகவுண்டா?
நாயும் பூனய்யும் இடுஞ்சண்டய்
நாளும் கண்டோம் நாம் மகனே !

♦ ஆதி சிவனென ஒருகூட்டம்
ஆதாம் ஏவாள் எனவொன்றும்
ஓதி இங்கே திரிவதுவோ
ஊரய்க் கெடுக்க ! உணர் ! மகனே !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மதங்கள் பலப்பல பிரித்தேதான்
மனிதனைய் இங்கே சிதைத்தவரோ
சதியே செய்த சண்டாளர் !
மதியாய் இவற்றைய் என் மகனே !

- குரங்கின் வம்சா வளியேதான்
குலமாம் மனிதர் என்பதுவும்
சரியே போல்தான் தெரிகிறது
சாயல் சேட்டைய் காணீரோ !



- பிய்த்து எறிந்த பூமாலைய்
ஒவ்வோ ரிதழ்போல் உதிர்ந்தேதான்
உலகம் சிதைந்தே கண்டோமே !
உணரீ ரோ? இவ் வுலகீரே !

* * *

30. சூழல்

- பூவுக் கொவ்வோர் மணமுண்டு
புரிந்து கொள்வாய் ! நீ முகர்ந்து !
புரிந்து சொல்வாய் ! நீ முகர்ந்து !

- ஊருக் கொவ்வோர் மணமுண்டு
உணர்ந்து கொள்வாய் ! நீ புரிந்து !
உணர்ந்து கொள்வாய் ! நீ புரிந்து !

- வாழும் சூழல் வகுத்ததுதான்
நாளும் ஒருவர் சொல்செயலே !
நாமும் அதய்யே நன்குணர்வோம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ மண்ணின் வாசனய் என்பதுவோ
எண்ணம் சொல்லில் செயலில்தான் !
எண்ணி யுணர்வாய் ! என்மகளே !

♦ சூழல் ஒழுங்காய் அமய்யாது
சுகமே இல்லய் என்மகனே !
சுகமே இல்லய் என்மகளே !



♦ நல்லவர் வல்லவ ராகுவதோ
நமது சூழல் தானம்மா !
நமது சூழல் தானப்பா !

* * *

31. பாடசாலய்

♦ பாட சாலய் என்றாலோ
பாகற் காய்போல் கசக்கிறதோ?
போக மாட்டேன் அங்கென்றே – நீ
புலம்பி அழுதல் சரிதானோ?

♦ எழுந்திரு என்றே நான்சொல்ல
இழுத்துப் போர்த்தி நீபடுத்தாய் !
தூக்கம் போலே பாவனய்யே ! – இது
சுகமே அல்ல என்மகனே !



♦ காலய்க் கடனய் முடியென்றேன்
கண்ணீர் சிந்தி நீநின்றாய்!
வேளய்க் கதுநீ செய்தாயா? – மற்ற
வேலய் விரய்ந்தும் செய்யவில்லய் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ பல்லைத் துலக்கு என்றேன்நான்
பல்லைக் கடித்து நீயழுதாய் !
நல்ல தல்ல என்மகனே ! – நீ
நல்ல பிள்ளை நானறிவேன் !

♦ முகத்தைக் கழுவு என்றேன்நான்
முகத்தைச் சுழித்தே நீநின்றாய் !
நகத் தைக் கடித்தும் நின்றாயே ! – அது
நல்ல தல்ல என்மகனே !



♦ சீருடை யணியென நான்சொல்ல
வேறு பக்கம் நீதிரும்பி
யாருக் கோநான் சொல்வதுபோல் – நீ
ஏனோ? நின்றாய் ! என்மகனே !

♦ அதிபர் அரக்கன் அடித்தானா?
ஆசிரி யரும் உனை ஏசினரா?
எதுக்கோ இந்தப் பிகுவெல்லாம்? – நீ
எனக்குச் சொல்லக் கூடாதா?



♦ சின்ன வயதில் படிக்காது
சிணுங்கிச் சுணங்கிப் பின்னடைந்தால்
பின்னர் நீயே துயர்படுவாய் ! – நீ
பின்நிற் காதே ! முன்ஓடு !

♦ நன்றே இன்று படித்தால்தான்
நலமாய்ப் பின்னர் நீவாழ்வாய் !
மன்றா டியுனைக் கேட்கின்றேன் ! – என்
மகனே ! பாட சாலை செல் !

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. விளம்பரம்?

- கவிதய் நீங்கள் எழுதுவதோ
காலவிரயம் தானப்பா ! – அக்
கழுதய் வேண்டாம் ! என்றானே ! – என்
கடய்சி மகனோ கவலய்யுடன் !

- "காரணம் என்ன? சொல்" என்றேன்
கய்யய்க் காலய் அவன்நீட்டி – அதய்க்
காரணங் காட்டி விளக்குகின்றான் – அவன்
கதய்யும் சரிதான் ! காண்பீரே !

- "பத்திரிக்கய் சஞ்சிகய்யில்
பார்த்தேன் இல்லேன் உன்படத்தை – ஆம்!
டி.வி யிலுமே உன்உருவம் – நான்
போயிடக் காணேன் !" என்கின்றான் !

- "கவிதய் நூலென வெளியிட்டீர் !
காசு பணமே வீண்விரயம் ! – ஆம் !
அதய்ப்பற்றிப்பொது ஊடகத்தில் – நான்
அறிந்தேன் இல்லேன் !" என்கின்றான் !

- விளம்பர மொன்றய் மாத்திரமே
விரும்பு கின்றான் ! என்மகனே ! –ஆம் !
விளங்கிக் கொண்டேன் நானிப்போ ! –நன்கு
விளங்கிக் கொண்டேன் நானிப்போ !

- அடுத்த நாள்அதி காலய்யிலே
"அப்பா ! எழுங்கள் !" என்கின்றான்– ஆம் !
துடித்து நானும் எழுகின்றேன் ! – அதன்
தொடர்பு காண ஆவலுடன் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- “அப்பா ! இன்று பதினொன்று
செப்டெம் பர்மா தம்” என்றே ~ ஆம் !
பாரதி படப்பத் திரிகய்காட்டி ~ அவன்
“பாரதி பிறந்த நாள் !” என்றான் !

- ஆமாம் ! நானும் அதுபார்த்தேன் !
அவன்சொன் னபடி அலங்கரிப்பு?~ அய்யோ!
“ஆமா ! இப்படி விளம்பரமே ~ ஆம் !
ஏனாம் ? உமக்கு இல்லய்”யென்றான் !

- பாரதி செத்த நாளய்யுமே
பாரதி பிறந்த நாளாகப் ~ புகழ் ?
பத்திரிக்கய் விளம் பரத்தய்த்தான் ~ ஆம் !
பார்த்தேன் ! மனதுள் நானழுதேன் ?

- பாரதி செத்தது செப்டெம்பர்
பதினொான் றல்ல, பதின்மூன்றே ! ~ ஆம் !
இருநாள் முன்னர் ஏன்?கொன்றார் ! ~ அதய்
எவரும் அறியச் சொல்வார் யார்?

- அவனது இறுதி ஊர்வலத்தின்
அணியாய்ச் சென்றஆ ரியக்காட்சி ! ~ ஆம்!
இருபது பேர்மட் டும்தானாம் ! ~ ஆஹா !
இன்பம் ! இன்பம் ! இதுவன்றோ ?

- வெள்ளய்யர் ஆட்சிக் குப்பயந்தே
வெளியில் வரவே மாட்டாது ~ தம்
பாரதி 'மரண ஊர்வலத்தில் ~ பலர்
பங்குகொள் ளாது ஒளிந்தாரோ?

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 33. பெண்

♦ பொன்னே ! மணியே ! என்று – உனைப்
போற்றிப் புகழ்வது இன்று
பின்னே நீபடப் போகும் துயருக்கு
முன்னர் ஒத்தடம் ! மகளே ! – ஆம் !
முன்னர் ஒத்தடம் ! மகளே !

♦ மனய்வி எனும்நிலய்க் குயர்ந்து – நீ
மரண அவஸ்த்தய்ப் படுவாய் !
மனய்யில் அடிமய் தானோ?
மனய்வி என்பதன் பொருளே !

♦ மாமி மாமன் என்போர் – உன்னய்
மாடாய் உழவய்ப் பாரே !
ஆமாம் ! அன்பு மகளே ! – நான்
அனுபவிக் காதது அல்ல !

♦ தாயாய் நீபடப் போகும் – அந்த
நாய்படாத அப் பாட்டய்
நானும் அனுபவித் தவளே ! – மகளே !
நானும் அனுபவித் தவளே !



♦ ஆண்குலம் என்பது இங்கே – ஆம் !
அரக்கர் குலமே தானோ? – நான்
அனுபவத் தால்தான் சொன்னேன் ! – பின்
அறிவாய் நீயும் ! கண்ணே ! – பின்
அறிவாய் நீயும் ! பொன்னே !

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 34. புத்தன்

- இந்து சமயத்தின்
இன்னல் களைய்ந்திட
இங்குதித்தான் புத்தனே ! ~ ஆம் !
இங்குதித்தான் புத்தனே !

- சாதிக் கொடுமைத்
தாண்டவத் தாலே
சலிப்படைய்ந்தான் புத்தனே ! ~ புது
வழிகாண விழைய்ந்தான் !

- ஆட்டைய்ப் பலியடும்
அக்ரமம் கண்டுமே
ஆட்சேபித் தானே ! ~ புத்தன்
ஆட்டைய்விடு வித்தான் !

- கொலைய்களவு பொய்காமம்
குடிகூ டாதென
கொள்கைய்வகுத் தானே ! ~ புத்தன்
கொள்கைய்வகுத் தானே !

- அன்பு ஈவிரக்கம்
அகிம்சைய் அன்றோ !
அவன் திரு அவதாரம் ! ~ ஆம் !
அவன் திரு அவதாரம் ! ~ ஆம் !
அவனிக் காதாரம் !

- மனிதனாய்ப் பிறந்தேன் !
மனிதனாய் வாழ்கிறேன் !
மனிதனாய்த் தானிறப்பேன் ! ~ என்ற
மாமனிதன் புத்தனே ! ~ ஆம் !
மகான்தான் அவனே !

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. நாயே !

- நன்றி மறவா எனய் நீங்கள்
நாயே என்றே ஏசாதீர் !
அய்யா ! ஏசாதீர் !
அம்மா ! ஏசாதீர் !

- உண்ட வீட்டுக்
கொரு நாளும்
ரெண்டகம் மட்டும்
நான் செய்யேன் !
ரெண்டகம் மட்டும்
நான் செய்யேன் !

- காவல் வேலய்
செய் கின்ற
கடமய்யில் என்றும்
நான் தவறேன் !
கடமய்யில் என்றும்
நான் தவறேன் !

- வாலய் ஆட்டி
நன்றி சொல்லும்
வழமய்யி லிருந்தும்
நான் மாறேன் !
வழமய்யி லிருந்தும்
நான் மாறேன் !

(மாறு)



- நாயே என்று யாரய்யுமே
நன்றே இல்லய் ஏசுவது !
நாம் ஏசுவது !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய்போல் நன்றி உடய்யாரய்
நாமெங் கேயும் காணோமே !
நாம் ~ காணோமே !

♦ உண்ட வீட்டுக்கு ரெண்டகமே
என்றுஞ் செய்வோர் உள்ளாரே !
இங் ~ குள்ளாரே !
நன்றே இதய் நீ மனதில்வய் !
என்றும் இதய் நீ மனதில்வய் !
உன் ~ மனதில்வய் !

♦ நாயய்ப் போல நன்றியுள்ள
நல்லோர் பலரே இங்குண்டேல் !
ஆம் ! ~ இங்குண்டேல் !
நலிவே இல்லய் ! என் மகனே !
நலிவே இல்லய் ! என் மகனே !
ஞா ~ பகத்தில்வய் !

♦ கண்டும் காணார் போற்போகும்
கயமய் நாயிடம் இல்லய்காண் !
ஆம் ! ~ இல்லய்காண் !
வாலய் ஆட்டி வணங்கும்காண் !
வாழ்நாள் முழுதும் மறவாதே !
ஆம் ! ~ மறவாதே !

(மாறு)

♦ நாயென யாரய்யும் ஏசுவது
நாயினுக்கே அவ மானமன்றோ !
நாமதய் இன்றே கய்விடுவோம் !

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Kandy M. Raamachandhran



### 36. பாரதி

- செத்த பின்னர் - பாரதிக்குச்
சிலய் எழுப்பினார் - செந்
தமிழ ரென்பவர் ! - செந்
தமிழ ரென்பவர் ! (செத்த)

- பட்டினியால் சாகவிட்டுப்
பாடய்தூக்க ஆளில்லாது
பட்டினியால் சாகவிட்டுப்
பாடய்தூக்க ஆளில்லாது (செத்த)



- கவிதய்யுனக்குக் கய்வராது
கதய்வசனம் எழுதுஎன்றே
கவிஞனென்றே ஏற்றிடாது
காலய்வாரி விட்டுவிட்டு (செத்த)

- சேரிசென்று சோறுவுண்ட
சின்னச்சாதி அய்யரென்றே
காறியே உமிழ்ந்ததோடு
கண்டபடித் திட்டிவிட்டு (செத்த)

- மாட்டிறச்சித் தின்பரோடு
கூட்டுச்சேர்ந்த கூற்றனென்றே
வீட்டய்விட்டு ஓட்டியேதான்
வீதியிலே அலய்யவிட்டு (செத்த)

- நாதியற்றுச் செத்தபோது
நாலுபேர் அருகில் இல்லய்...
இறுதியூர் வலத்தில் செல்ல
இருபதுபேர் இல்லய் ! யடா ! (செத்த)

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. ஆதங்கம்

- மகனே ! எழுந்திரு என்றால் ~ "நான்
மாட்டேன் !" என்பது போல ~ நீ
மறுபக்கம் திரும்பிப் படுத்தல்
முறய்யா? சொல் ! என் கண்ணே ! ~ ஆம்!
சரியா? சொல் ! என் பொன்னே !

- கோழி 'கொக்கோ' என்றே ~ உன்னைக்
கூவி அழய்த்தது கேட்டும் ~ நீ
கூனிக் குறுகியே படுத்தல் ~ ஆம் !
கூடா தய்யா ! மகனே ! ~ ஆம் !
கூடா தய்யா ! மகனே !



- வேளா வேளய்க் கெழுந்து ~ நீர்
விரய்ந்து ஒவ்வொன்றாக ~ ஆம் !
காலய்க் கடனய் முடித்தல்
கடமய் என்றுணர் வீரே ! ~ ஆம்
கடமய் என்றுணர் வீரே !

- பாட சாலய் சென்றே ~ ஆம் !
படிக்க வேண்டிய வயதில் ~ நீர்
சோடய் போய்விட் டாலோ ! ~ பின்னர்
சுகமே இல்லய் ! சொன்னேன் ! ~ அம்மா !
சுகமே இல்லய் ! சொன்னேன் !

- கல்வி ஒன்றுமட் டும்தான் ~ ஏழய்க்குக்
கய்கொடுத் தென்றும் உதவும் ~ எனக்
கற்பனய் செய்கின் றேன் நான் ! ~ நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதே எழுந்திடு வீரே ! – ஓ !
கடிதே எழுந்திடு வீரே !

◆ தொழிற்சங் கங்கள் வய்த்த
துரோ கிகளே ! – இங்கே
தொடர்ந்தார் சாதிச் சங்கம் ! – எம்
கல்விக் கண்ணய்க் கெடுத்த
கயவர் இவரே ! காண்பீர் !
கான்றி யுமிழ்வீர் !



◆ சந்தாப் பணம் பெறல் ஒன்றே
சாதனய் என்றும் இவர்க்கே !
வெந்த புண்ணில் வேளய்ப் – பாய்ச்சும்
வீணர் இவரே ! காண்பீர் !
வீணர் இவரே ! காண்பீர் !
கான்றி யுமிழ்வீர் !

◆ "டியூஷன்" கடய்யில் கல்வி – பெற
துட்டுக் கெங்கே? போவோம் ! அய்யோ !
ஆண்டோர் செய்தார் துரோகம் ! – இன்னும்
வேண்டாமோ துடய்த் தெறிய? – ஆம் !
விழித்தெழு வீரே ! உடனே !
விழித்தெழு வீரே ! உடனே !



* * *

நூல் : 28 • தாய் உள்ளம்
(சிறுவர் பாடல்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. கூண்டுக் கிளி

- பால் பழம்
  எனக்குத் தந்தாலும்
  பக்கம் வந்தே
  கதய்த் தாலும்
  பாழ்போல் வேதனய்
  உணர் கின்றேன் ! ~ நான்
  பாழ்போல் வேதனய்
  உணர் கின்றேன் !

- அம்மா ! அப்பா ! வய்ப் பிரிந்து
  அநாதய் யானேன் ! அய்யோ ! ~ என்
  அம்மா ! அப்பா ! எங்கே ? ~ ஓ !
  அம்மா ! அப்பா ! எங்கே ?

- அக்கா தங்கய் எங்கே? ~ என்
  அண்ணன் தம்பி எங்கே?
  என்னய் நினய்க்கின் றாரோ? ~ இல்லய்
  என்னய் அவர் மறந் தாரோ?

- பால்பழம் இருந்தும் என்ன !
  பக்குவக் கூடிருந் தென்ன !
  சுதந்திர மற்ற அடிமய் ~ வாழ்வு
  சூன்யம் தானே ! காண்பீர் !



* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. குழந்தய் உள்ளம் !

- பொண்ணின் பக்கத்தில்
  நானிருந்தேன் ~ அப்போ !
  போட்டோ எடுத்தார்
  பாரம்மா !
  பொண்ணய்ப்போல் என்னய்யும்
  நீயுடுத்தி ~ ஒரு
  போட்டோ எடுத்திட
  வேண்டுமம்மா ! ~ என்னய்ப்
  போட்டொ எடுத்திட
  வேண்டுமம்மா !

- அண்ணனய் மாப்பிள்ளய்
  போல் உடுத்தி ~ ஆம் !
  அவனய்யும் ஓர் படம்
  எடுப்போமா?
  அண்ணனய்க் கூப்பிட்டுக்
  கேளு அம்மா ! ~ நான்
  அவனுடன் சேர்ந்துமோர்
  பட மெடுக்க ? ~ நான்
  அவனுடன் சேர்ந்துமோர்
  பட மெடுக்க ?

- அன்னய்க்கு வந்தானே !
  அண்ணன் எங்கே? ~ ஏன் ?
  இன்னய்க் கிங்கே வரவில்லய் !
  அவனய்யும் நீபோய்க்
  கூட்டி வாம்மா ! ~ நான்
  அவனுடன் சேர்ந்துமோர்
  பட மெடுக்க ?



* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. பெர்னாட் ஷா

- பெர்னாட் ஷா பேரறிஞர்
பிறந்த நாள் ஒன்றில் ~ அவனுக்குப்
பிரியமுள்ள மலர்கொண்டு
பார்க்க வந்தாராம் ! ~ அவருக்குப்
பிரியமுள்ள மலர்கொண்டு
பார்க்க வந்தாராம் ! ~ பலர்
பார்க்க வந்தாராம் !



Bernard Shaw

- கதவுமூடி இருந்ததனால்
கதவைத் தட்டவே ~ அவர்
கதவைத்திறந்து வெளியில்வந்து
காரணங் கேட்டராம் ! ~ அவர்
கதவைத் திறந்து வெளியில்வந்து
காரணங் கேட்டாராம் ! ~ அவர்
காரணங் கேட்டாராம் !

- இன்றுஉங்கள் பிறந்தநாளே !
இதுதெரி யாதா? ~ அதற்
கென்றுநாமோ கொண்டுவந்தோம்
மலர்கள் என்றனராம் ! ~ அதற்
கென்றுநாமோ கொண்டுவந்தோம்
மலர்கள் என்றனராம் ! ~ வந்தோர்
மலர்கள் என்றனராம் !

- குழந்தைகளிலும் தான் எனக்குக்
கூடுதல் பிரியம் ~ அதனால்
குழந்தைகளைக் கழுத்தில்கொய்து
கொடுப்பீர் என்றாராம் ! ~ ஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தய்களய்க் கழுத்தில்கொய்து
கொடுப்பீர் என்றாராம் ! ~ ஷா
கொடுப்பீர் என்றாராம் !

♦ வந்தவர்கள் வாய்புதய்த்து
மௌனி யாகவே ~ பெர்னாட் ஷா
வந்தவர்க்கு நன்றிசொல்லி
மறுமொழி பகன்றாராம் ! ~ ஆம் !
வந்தவர்க்கு நன்றிசொல்லி
மறுமொழி பகன்றாராம் ! ~ இப்படி
மறுமொழி பகன்றாராம் !



♦ செடிகொடியுடன் மலர்களய்யும்
சேர்த்துக் பார்ப்பதே ~ எனக்குப்
பிடித்தம் பிள்ளய்களே ! ~ ஆம் !
பிடித்தம் பிள்ளய்களே ! ~ என்றே
இடித்துரய்த் தாராம் ! ~ ஷா
இடித்துரய்த் தாராம் !~ஆம் !
படித்துத் தந்தாராம் !

(மாறு)

♦ கிழவனென்று என்னய்யிப்போ
கிண்டல் பண்ணுவா? ~ நீர்
கிண்டல் பண்ணுவா? ~ ஆம் !
நான்பிறந்த நாளய்யின்று
ஞாபகஞ் செய்தீர் ! ~ ஆம் !
நான்பிறந்த நாளய்யின்று
ஞாபகஞ் செய்தீர் ! ~ என்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வக்கணைய்யாய்க் கூறிவிட்டு
வணைக்கஞ் செய்தாராம் ! ~ ஷா
வணைக்கஞ் செய்தாராம் !

(மாறு)

◆ நோய்வாய்ப் பட்ட
பெர்னாட் ஷாவய்
ஓய்வெடுப் பீர் என
டாக்டர் சொல்லித் ~ தான்
ஓய்வெடுத் திடவே
போனாராம் ! ~ டாக்டர்
போனாராம் !

◆ திரும்பி வந்து
பார்க்கய்யிலே ~ ஷா
விரும்பியோர் புத்தகம்
படிக்கக் கண்டு ~ டாக்டர்
திரும்பியோர் கேள்வி
கேட்டாராம் !

◆ "படிக்க உமக்கு
என்ன உண்டு ?~ ஷா
பகரு வீரே"
என்றாராம் ! ~ டாக்டர்
"பகரு வீரே !" என்றாராம் !

◆ "படிக்க எனக்கு நிறய்யவுண்டு
நடிக்கவில்லய்" எனக் கூறி
படுக்கய்யிலே உயிர் நீத்தாராம் ! ~ ஷா
படுக்கய்யிலே உயிர் நீத்தாராம் !

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. உணவூட்டல்

♦ காக்கா ! போ ! போ !
உனக் கில்லய் ! – என்
கண்மணிக் கேதான்
பாற் சோறு – என்
கண்மணிக் கேதான்
பாற் சோறு !



♦ ஆ ! ஆ ! வாயயத்
திற நண்ணா
அன்பாய் ஓரிரு
கவளந் தான் – மென்று
தின்பாய் ஓரிரு
கவளந் தான் !
நன்றாய் நீயின்று
தின்றால் தான்
நாளாய் நீவளர்
வாய் நண்ணா ! (காக்கா)

♦ எனக்கென இந்தா !
ஓர் கவளம் !
ஆ ! ஆ ! வாயயத்
திற நண்ணா ! (காக்கா)

♦ அப்பா வுக்காய்
ஓர் கவளம் ! .... (காக்கா)
அண்ணா வுக்காய்
ஓர் கவளம் ! .... (காக்கா)
அக்கா வுக்காய்
ஓர் கவளம் !
ஆ ! ஆ ! வாயயத்
திற நண்ணா ! (காக்கா)

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. காகம்



♦ 'காக்கா' என்றேன்
'காக்...கா' என்றோர்
காகம் வந்ததே ! ~ பறந்து
காகம் வந்ததே ! ~ ஆஹா !
காகம் வந்ததே !

♦ பக்க மாகப்
பாண்துண் டெறிந்தேன்
பாய்ந்து வந்ததே ! ~ குதித்துப்
பாய்ந்து வந்ததே ! ~ ஆஹா !
பாய்ந்து வந்ததே !

♦ பாணைய்க் கவ்வி
வாயி லெடுத்துப்
பறந்து போனதே ! ~ மேலே
பறந்து போனதே ! ~ ஆஹா !
பறந்து போனதே !

♦ பறந்த காகம்
பணிந்து வந்தே
கிளய்யில் அமர்ந்ததே ! ~ மரக்
கிளய்யில் அமர்ந்ததே ! ~ ஆஹா !
கிளய்யில் அமர்ந்ததே !

♦ வாய்ப்பாண் துண் டய்க்
காலடி... மிதித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கொத்தித் தின்றதே ! ~ சொண்டால்
  கொத்திக் தின்றதே ! ~ ஆஹா !
  கொத்தித் தின்றதே !

- 'சூச்சூ' என்றேன்
  அஞ்சியெஞ் சிய தய்த்
  தூக்கிப் பறந்ததே ! ~ சொண்டில்
  தூக்கிப் பறந்ததே ! ~ ஆஹா !
  தூக்கிப் பறந்ததே !

- உயிர்வாழ் வுக்கு
  உணவே யின்றித்
  துணைய்வே றில்லய் ~ என
  உணர்த்தி விட்டதே ! ~ காகம்
  உணர்த்தி விட்டதே !

- பாணையக் கவர்ந்து
  பறந்த பாங்கில்
  பாடமே கற்றேன் ! ~காக்கய்யிடம்
  பாடமே கற்றேன் ! ~ நல்ல
  பாடமே கற்றேன் !

- உருட்டுக் காகக்
  குருட்டுப் பார்வய்
  உணவுக் காகவே ! ~ இதய்
  உணர்ந்திடு வீரே ! ~ நன்றே
  உணர்ந்திடு வீரே !

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. பாடம் !

♦ தாத்தா வீட்டுள்
வந்தார் ~ பேரன்
"வா ! வா ! வந்து
உக்காரு" ~ எனக்
கய்யய்ப் பிடித்தே
இழுத்தான் ! ~ பேரன்
கய்யய்ப் பிடித்தே
இழுத்தான் !



♦ அம்மா அங்கோடி
வந்தே ~ மகனய்
அதட்டிச் சொல்லு
கின்றாள் ~ "சீச்சீ !
வா ! வா ! என அழய்க்
காதே ! ~ அவரய்
வாங்கள் ! எனஅழய் !"
என்றே !

♦ அடுத்த நாள்அதி
காலய் ~ ஆம் !
அங்கோர் பூனய்
வரவே .........
"வாங்க ! வந்து
இருங்க ! ~ இப்ப
அம்மா ! ~ தோசய்
குடுறா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



◆ சட்டினி செய்தும்
தருவா ! ~ கொஞ்சம்
சாப்புட் டுட்டே
போங்க !” ~ எனச்
சாற்றும் அழகய்ப்
பாரீர் !

◆ பிஞ்சு வயதில்
கேட்டே ~ மனதில்
துஞ்சி இருந்தவய்
தாமே ~ பின்னர்
நின்றே நிலய்க்கும்
நன்றே ~ ஆம் !
நின்றே ~ நிலய்க்கும்
என்றும் !

◆ தந்தய் தாயின்
தாக்கம் ~ பிள்ளய்யிலே
தங்கி நிற்குமே
வாங்கி ! ~ உள்
வாங்கி ! ~ பின்
ஓங்கி ! ~ மிக
வீங்கி !



* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44. வேடிக்கய்?

♦ கண்களய்க் கய்களால்
மூடுகிறான் – "என்னய்க்
காணோம் இங்கே"
என்கின்றான் ! – மகன்
"காணோம் இங்கே"
என்கின்றான் ! – ஆம் !
கய்கள் மூடிய
கண்களுடன் !

♦ "தம்பியய் எங்கும்
காணோமே" –எனத்
தாயும் பொய்யாய்க்
கேட்கய்யிலே – "என்னய்
எங்கும் காணோம்"
என்கின்றான் ! – "என்னய்
எங்கும் காணோம்"
என்கின்றான் !

♦ "அங்கே என்மகன்
இருப்பானோ?" – என
அம்மா பொய்யாய்க்
கேட்கய்யிலே – அவன்
"அங்கே நான்இல்லய்"
என்கின்றான் ! – அவன்
"அங்கே நான்இல்லய்"
என்கின்றான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

♦ "இங்கே என்மகன்
இருப்பானோ?" என
இன்னும் அம்மா
கேட்கய்யிலே ~ அவன்
"இங்கே நான்இல்லய்"
என்கின்றான் ! ~ அவன்
"இங்கே நான்இல்லய்"
என்கின்றான் !

♦ "எங்கும் இல்லா
என் கண்ணைய் ~ நான்
எப்படிக் காண் பேன்?"
என அம்மா ~ சும்மா
ஏங்குதல் போலே
நடித்தவுடன் ~ அவன்
"கீக்கீக்" என்றே
குரல் கொடுத்து ~ "நான்
இங்கே தானே
இருக்கின்றேன் !" என
இருவிழி மூடிய
கய்களய் எடுத்தே....
இன்பம் பொங்கப்
பார்க்கின்றான் ! ~ முன்
வருகின்றான் !



ஆசிரியர் :கண்டி எம்.ராமச்சந்ரன்
(ஆர். முத்துக்கருப்பன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ "எங்கே ? மகனே !
நீ இருந்தாய்" – என
இன்பம் பொங்கிக்
கேட்கின்றாள் ! – அம்மா !
இனிமய் தவழக்
கேட்கின்றாள் !

◆ "கண்களை ய் மூடி நான்
இருந்ததனால் – என்னய்க்
காண உ ன்னாலே
முடியவில்லய்" – எனக்
கண்களய் மூடிக்
காட்டுகின்றான் ! – கய்யால்
கண்களய் மூடிக்
காட்டுகின்றான் !

◆ கண்ணய் மூடி
ஒளிந்தே தான் – அவன்
காட்டுவதில் இன்பம்
காணுகின்றான் !

◆ "அம்மம்மா !" இதில்
அவன் காணும்
ஆனந்தத்தின்
அள வென்ன ? – அதய்
அறிந்து சொல்ல
வல்லோன் எவனோ ?

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. வட்டுக் – கருப்
பட்டி?

◆ சிரட்டை யுள்ளே
மண்ணய் அள்ளிப்
புரட்டித் தட்டுகிறாள் ! – தங்கய்
புரட்டித் தட்டுகிறாள் !

◆ புரட்டித் தட்டி
அடுக்கி வய்த்தே
வட்டு என்கின்றாள் ! – கருப்
பட்டி என்கின்றாள் !

◆ ஒண்ணு ரெண்டு
மூணு என்றே
எண்ணிப் பார்க்கின்றாள் ! – இன்னும்
ஒன்று சேர்க்கின்றாள் !

◆ அம்மாவுக்கு இந்தவட்டு
அப்பாவுக்கு இந்தவட்டு
அக்காவுக்கு இந்தவட்டு
அண்ணாவுக்கு இந்தவட்டு ....
எண்ணிக் கணக்கிட்டே – பின்
எனக்கு மட்டும்
ஒண்ணு மில்லய்
இதுஏன்? என்றே – கய்யால்
தரய்யில் அறய்ந்து
அறய்ந்து அறய்ந்து
விழுந்து சிரிக்கிறாள் ! – மனம்
மகிழ்ந்து சிரிக்கிறாள் !

599814

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி. எம். ராமச்சந்திரன்

UNIVERSITY OF JAFFNA LIBRARY 27 SEP 2006

UNIVERSITY OF PERADENIYA
27 SEP 2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (28) தாய் உள்ளம்

## (சிறுவர் பாடல்கள்)

ஆசிரியர் : கண்டி எம். ராமச்சந்ரன்
(ஆர். முத்துக்கருப்பன்)

முதற் பதிப்பு : 2006-01-07

வெளியீடு : 2006-04-07



599814

ஆக்கங்கள் : 45+3 = 48
பக்கங்கள் : 64+8 = 72
விலய் ரூபாய் : 175/=

ISBN : 955-98438-8-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org